In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.150/2019 நாள் : 03.06.2026 Time 02.30 PM

வா.சா.1 (சந்திரசேகர்) அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –

என்னுடைய பாட்டனார் பெயர் தேஜோ மையானந்தம் ஆகும். அவருக்கு என் அப்பா முத்தையன் மட்டுமே மகன் என்றால் சரிதான். என் தாயார் பெயர் தனலட்சுமி. என் பெற்றோர்களுக்கு நான், ராஜ்முத்தையா, சீனிவாசன், சுப்பிரமணி ஆகிய நான்கு மகன்கள் என்றால் சரிதான். பத்மலோசனா, யசோதரா ஆகியோர்கள் மகள்கள் என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் சுப்பிரமணி இறந்துவிட்டார். அவருடைய மகள் சாந்தி உயிருடன் உள்ளார். என் சகோதரர் சீனிவாசன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராஜ்முத்தையா என்பவர் உயிருடன் உள்ளாரா அல்லது இறந்துவிட்டாரா என்பது நிரூபணம் ஆகவில்லை என்றால் சரிதான். பத்மலோசனா என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பத்மலோசனாவிற்கு கமலா, விமலா, உதயக்குமார் ஆகிய மூன்று வாரிசுகள் என்றால் சரிதான். யசோதரா உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்தை என் பாட்டனார் தேஜோ மையானந்தமும், பிரதிவாதியின் தகப்பனார் தட்சிணமூர்த்தியும் 1934ல் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலம் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா சி செட்யூல் சொத்தில் என் தாத்தாவிற்கும், தட்சிணமூர்த்திக்கும்

தலா பாதி பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தட்சிணமூர்த்திக்கு இரண்டு மகன்கள் என்றும், அதில் மூத்தவர் முத்தையா என்றும், இளையவர் பிரதிவாதி என்றும் சொன்னால் சரிதான். முத்தையாவும், பிரதிவாதியும் அவர்களுடைய தந்தையாருக்கு தாவா சி செட்யூல் சொத்தில் கிடைத்த பாதி பாகத்தை பிரித்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் சகோதரர் D.முத்தையா என்னுடைய தகப்பனாருக்கு வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணப்படி பிரதிவாதியின் சகோதரர் D.முத்தையாவிற்கு கிடைத்த 1/4 பாகத்தை என்னுடைய தகப்பனார் முத்தையாவிற்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் என் தந்தையாருக்கு தாவா சி செட்யூல் சொத்தில் மொத்தம் 3/4 பங்கு பாகம் பாத்தியம் என்றால் சரிதான். மீதமுள்ள 1/4 பங்கு பாகம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திற்கு பாத்தியமானது என்றால் சரிதான். என் தந்தையார் T.முத்தையா 1993–ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தந்தையார் இறந்தபிறகு தாவா சி செட்யூலில் கிடைத்த 3/4 பங்கு பாகமானது எனக்கும், என் சகோதரிகளுக்கும், சகோதரர் ராஜ்முத்தையாவிற்கும், சுப்பிரமணி மகள் சாந்திக்கும், என் தாயாருக்கும் கூட்டாக பாத்தியம் என்றால் சரிதான். சுப்பிரமணி மகள் சாந்தி 1994ம் ஆண்டில் கைமாறு தொகை பெற்றுக்கொண்டு எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட

சொத்துக்களில் அவருக்குரிய பாகத்தினை பாக பாத்திய விடுதலை செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல் என்னுடைய சகோதரிகள் பத்மலோசனாவும், யசோதராவும் சேர்ந்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் அவருக்குரிய பாகத்தினை பொறுத்து கைமாறு பெற்றுக்கொண்டு பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். அந்த இரு பாகபாத்திய விடுதலை ஆவணங்களும் வா.சா.ஆ.3, 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்துக்களில் 3/4 பங்கு பாகமானது எனக்கும், என்னுடைய சகோதர் ராஜ்முத்தையாவிற்கும், என் தாயாருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்து நீங்கலாக நானும், என்னுடைய சகோதர் ராஜ்முத்தையாவிற்கும், என் தாயாரும் 1996–ல் வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் ஆமாம். அந்த பாகப்பிரிவினை ஏற்பட்ட காலத்தில் ராஜ்முத்தையா அமெரிக்காவில் கலிபோர்னியா மாகானத்தில் இருந்தார் என்றால் சரிதான். அதனால் அவருக்காக அவருடைய சகோதரி பத்மலோசனா என்பவரை பவர் ஏஜெண்டாக நியமித்து அவர் பாகப்பிரிவினை பத்திரத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் என் சகோதரர் ராஜ்முத்தையாவிற்கு ஏ செட்யூல் சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு பி செட்யூல் சொத்துக்கள்

பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாயார் ரொக்கமாக பணம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். என் சகோதரர் ராஜ்முத்தையாவிற்கு பாகப்பிரிவினைப்படி ஒதுக்கப்பட்ட சொத்துக்கள்தான் இந்த வழக்கில் ஏ, பி அட்டவணை சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினைப்படி ராஜ்முத்தையாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அவருடைய அதிகாரம் பெற்ற முகவரான பத்மலோசனியிடமும், எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்னிடமும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பாகப்பத்திரப்படியும், பொது அதிகாரப்பத்திரப்படியும் பொது அதிகார முகவர் என்கிற முறையில் தாவா ஏ அட்டவணை சொத்துக்களை 1998ம் ஆண்டில் பத்மலோசனா பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தியிடம் குத்தகைக்கு ஒப்படைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா ஏ அட்டவணை சொத்துக்களை பொறுத்து கிருஷ்ணமூர்த்தி குத்தகைக்கு அனுபவித்து வருகிறார் என்பது எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திதான் தாவா ஏ அட்டவணை சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்துக்களை நான் அனுபவித்து வருவதாகவும், அதை பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் ஆமாம். தாவா ஏ அட்டவணை சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதால் நான் கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1997 முதல் 2004ம் ஆண்டு வரை ராஜ்முத்தையா எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை என்பதால் அவரை இறந்துவிட்டதாக அனுமானிக்கலாம் என பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு தெரிந்து 2000ம் ஆண்டுமுதல் 2007 வரையிலும், இன்று வரையிலும் ராஜ்முத்தையா எங்கு உள்ளார் என தெரியவில்லை. ராஜ்முத்தையா இன்றுவரை இல்லை என்பதால் அவர் இறந்துவிட்டதாக விளம்புகை செய்ய தனி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், இந்த வழக்கிலும் விளம்புகை பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். 2004ம் வருடம் ராஜ்முத்தையா இறந்துவிட்டதாக கருதும் பட்சத்தில் அவருடைய சொத்துக்கள் அவருடைய தாயாரான தனலட்சுமிக்கு பாத்தியப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தாயார் 2008ம் ஆண்டில் இறந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணம்தான் தனலட்சுமியின் இறப்பு சான்றிதழ் நகல் என்றால் சரிதான். ராஜ்முத்தையாவிற்கு முதல் வகுப்பு வாரிசு என் தாயார் மட்டுமே என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ராஜ்முத்தையாவின் சொத்துக்கள் எல்லாம் முதல்வகுப்பு வாரிசு என்கிற முறையில் என் தாயாருக்கு பாத்தியமானது என்றால் தெரியாது. அதனால் தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களை பொறுத்து என் தாயார் எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாயாரின் வாரிசுகள்

என்கிற முறையில் எனக்கும், யாசோதராவிற்கும், பத்மலோசனாவின் வாரிசுகளுக்கும், சாந்திக்கும் கூட்டு பங்குரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களை பொறுத்து நான், யாசோதரா, பத்மலோசனாவின் வாரிசுகளும், சாந்தி ஆகியோர்கள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சி அட்டவணை சொத்தை பொறுத்து என் தாயார் வா.சா.ஆ.6 உயில் சாசனத்தை எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் பத்திரத்தின் சான்றிட்ட நகலை நான் குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் பத்திரத்தின் அசல் கிருஷ்ணமூர்த்தியிடம் உள்ளது என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.6 உயில் சாசனத்தின் அசல் ஆவணம்தான் என் தாயார் எழுதிவைத்த உயில் சாசனம் என்றால் சரிதான். அந்த உயில் சாசனத்தின் அசல் பி.வா.சா.ஆ.1 ஆகும். அந்த உயில் ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என உள்ள இடத்தில் சந்திரசேகர் என உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் என்றால் சரிதான். என் மனைவி பெயர் திலகவதி ஆகும். வா.சா.ஆ.6 உயில் சாசனத்தின் கடைசி பக்கத்தில் நானும், என் மனைவியும், என்னுடைய சகோதரி யாசோதராவும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 உயில் சாசனம்தான் என் தாயார் எழுதிவைத்த கடைசி உயில் சாசனம்

என்றும், பின்னர் அதை ரத்து செய்யவோ, வேறு உயில் சாசனம் எழுதிவைக்கவோ இல்லை என்றால் சரிதான். அந்த உயில் சாசனமானது ராஜ்முத்தையா, பத்மலோசனா, பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவருக்கும் என் தாயார் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்தில் 3/4 பங்கு பாகமானது எனக்கும், என் சகோதரர் ராஜ்முத்தையாவிற்கும், தாயார் தனலட்சுமிக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த வகையில் என் தாயாருக்கு அவருக்குரிய பாகத்தை பொறுத்து உயில் சாசனம் எழுதிவைக்க உரிமையுண்டு என்றால் சரியல்ல. தாவா சி அட்டவணை சொத்தில் என் தாயாருக்குரிய பாகத்தை பொறுத்து உயில் சாசனம் எழுதிவைக்க உரிமை உண்டு என்றும், அதன் அடிப்படையில் பி.வா.சா.ஆ.1 உயில் சாசனம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. ராஜ்முத்தையாவிற்கு தாவா சி அட்டவணை சொத்தில் பாத்தியமான பாகமானது வாரிசுபடி என் தாயாருக்கு பாத்தியமானது என்றால் தெரியாது. தாவா சி அட்டவணை சொத்தை பொறுத்து நான் இந்த வழக்கில் கோரியுள்ள பாக விகிதாச்சாரம் தவறானது என்றால் சரியல்ல. அதேபோல் தாவா சி அட்டவணை சொத்தை பொறுத்து நான், யாசோதரா, பத்மலோசனாவின் வாரிசுகள், சாந்தி ஆகியோர்கள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும், அவர்களை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ராஜ்முத்தையாவிற்கு பாத்தியமான சொத்தானது எனக்கு மட்டுமே பாத்தியமானது என இந்த

வழக்கை நடத்துகிறேன் என்றால் சரிதான். ராஜ்முத்தையாவிற்கு பாத்தியமான தாவா சொத்துக்களில் என் குடும்பத்தை சேர்ந்த மற்ற உறுப்பினர்களுக்கும் பங்குரிமை இருப்பதால் தனிப்பட பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் என்றும், இந்த வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3, 4 விடுதலை ஆவணங்களை எனக்கும், என் சகோதரர் ராஜ்முத்தையாவிற்கும், என் தாயார் தனலட்சுமிக்கும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

(விசாரணை முடிந்த நேரம் 03.15 PM)